Register as a N paper eylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28உ திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ புரட்டாதி௴ எ௨ ( 1943 செப்டம்பர்௴ 23 வியாழக்கிழமை) [இல. சஎ

## யாழ்ப்பாணப் பட்டினசபை

### அங்கத்தவர்கள் போதாமையாற் கூட்டம் பின்போடப் பட்டது

யாழ்ப்பாணம் செப் 22—

யாழ்ப்பாணம் பட்டினசபையின் சென்ற கூட்டத்தில் நிறைவேறாத நிகழ்ச்சிகளையும், மின்சாரப்பகுதி வேலையாட்களின் வர்த்தகத் தகராற்று வழக்குகளில் டிஸ்திறிக் நீதிபதியால் அநுமதிக்கப்பட்ட நிலைமையைப்பற்றியும் ஆலோசிப்பதற்காக நேற்றுமாலை 5 மணிக்கு ஒரு விசேஷகூட்டம் கூடுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தலைவர் திரு. K. ஐயாத்துரை, திருவாளர்கள் R. R. நல்லையா, R சிவகுருநாதர், S. அருளானந்தம் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஏனைய அங்கத்தவர்கள் கூட்டத்துக்கு வரவில்லை.

திருவாளர்கள் C. பொன்னம்பலம், S. M. அபூபக்கர், V. S. இராமநாதன் ஆகியோர் தாங்கள் கூட்டத்துக்கு வராமைக்குக் காரணங்காட்டித் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தனர்.

## கொழும்பு வானொலி இசை மண்டலத்தின் ஆரம்பவிழா

### ஸ்ரீமத். விபுலானந்தா தலைமையிற் கொண்டாடப்பட்டது

கொழும்பு வானொலி இசைமண்டலத்தின் ஆரம்பவிழா சென்ற சனிக்கிழமை (18-9-43) பிற்பகல் 4-30 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஸ்ரீமத். சுவாமி விபுலானந்தா தலைமையில் கொண்டாடப்பட்டது. இசைமண்டலத்தின் வாத்ய கோஷ்டி ஆமந்திரிணை நடாத்தினார்கள். இசைமண்டலத்தின் முதற் தலைவராகிய ஸ்ரீமதி காராளசிங்கம் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசுகையில், சங்கீதமே ஒரு ஜனசமூகத்தின் நாகரிகத்திற்கு உரைகல் என்றும், நாங்கள் பலவகைகளில் விதேசிகளாயிருந்த போதிலும் சங்கீத விஷயத்தில் சுதேசிகளாயிருப்பதே இதற்குச் சான்றாகுமென்றும், நமது கல்வித் திட்டத்தில் சங்கீதம் ஒரு பிரதான பங்குடையதாயிருக்க வேண்டுமென்றும் கூறினார். கூட்டத்திற்கு ஏராளமான அன்பர்கள் வந்திருந்தார்கள். வித்தியாதிகாரி திரு. எச். எஸ். பேரேரா, சேர். இரத்தினஜோதி, சரவணமுத்து, திரு. எம். எஸ். திருவிளங்கம் முதலியார் சினனத்தம்பி முதலியார் பேசினார்கள். ஸ்ரீமதி காராளசிங்கம், ஸ்ரீ மணிபாகவதர், ஸ்ரீ. பழனியாண்டிப் பிள்ளை முதலியோர் கச்சேரி செய்தார்கள். "சங்கீதமே சுகமே" என்ற ஹாஸ்ய நாடகம் இசைமண்டல அங்கத்தவர்களால் நடிக்கப்பட்டது. இந்த ஹாஸ்யச் சித்திரத்தில் பிரதம நடிகராகவிருந்த சுப்புவின் விகடம் சபையில் இடையறா நகைப்பையுண்டாக்கிற்று. குப்புவும், சங்கீத வாத்தியாரும் ஏனைய பெண நடிகைகளும் திறம்பட நடித்தார்கள். இம்மண்டலத்தை அமைப்பதற்கு மூலகாரணமாயிருந்த திரு. க. கனகரத்தினம் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்களுக்கும் இம்மண்டலத்தை நிறுவப் பெரிதும் துணைபுரிந்த ஏனைய தொண்டர்களுக்கும் விழாவைச் சிறப்பிக்கவந்த அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்து, இம்மண்டலத்திற்குப் [illegible] வேண்டினார். [illegible] வேறியது.

## பிரான்ஸின் விடுதலை நெருங்கிவிட்டது

### கோர்ஸிகாதீவு முழுவதும் விரைவில் கைப்பற்றப் பட்டுவிடும்

லண்டன் செப் 21—

கோர்ஸிகாதீவு முழுவதும் விரைவில் ஜெர்மானியரிடமிருந்து மீட்கப் பட்டுவிடும். பிரான்ஸ் விடுதலை பெறும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறதென்று இன்று அல்ஜியர்ஸ் ரேடியோ விமர்சகர் கூறினர்.

பிரிட்டிஷ ராயல விமானப் படைப் பிரிவு டொடகானிஸ் தீவு கூட்டத்தைச் சேர்ந்த காஸ் என்னும் தீவில் இறங்கி அதைக் கைப்பற்றிக்கொண்டது.

உக்கிரமான சமர்

கோர்ஸிகா தீவுக்காக உக்கிரப் போராட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது. ஒருபக்கத்தில் ஜெர்மானியரும் மறுபக்கத்தில கோர்ஸிகா தீவைச்சேர்ந்த தேசாபிமானிகள் பிரெஞ்சு கூட்டு நடவடிக்கைத் துருப்புகள் இத்தாலிய வீரர்கள் ஆகியோரும் போராடுகின்றனர்.

## பிரெஞ்சு கூட்டு நடவடிக்கைப் படைகள் கோர்ஸிகாவில் இறங்கின

லண்டன் செப் 20—

பிரெஞ்சு கூட்டு நடவடிக்கைப் படைகள் கோர்ஸிகாவில் இறங்கியிருக்கின்றனவென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்று அல்ஜியேர்ஸ் ரேடியோ இன்றிரவு வெகு நேரத்துக்குப் பின்னர் கூறியது.

கோர்ஸிகாவில் படைகள் இறங்கிய செய்தியை ரேடியோ அறிவித்தபொழுது பிரெஞ்சுப் படைகளின் பிரதம சேனாதிபதியான ஜெனறல் ஜிராட் கூறியவற்றை ஆதாரமாகக் குறிப்பிட்டது.

ஜெனறல் ஜிராடிடமிருந்து கிடைத்த கீழ்க்காணும் அறிக்கையையும் குறித்த ரேடியோ வெளியிட்டது:-இத்தாலி யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டதென்ற செய்தி தெரிய வந்ததும் பிரெஞ்சு கோர்ஸிகா தேசாபிமானிகள் ஜெர்மனியரை எதிர்த்துச் சண்டை செய்ய ஆரம்பித்தனர். தேசாபிமானிகளுக்கு ஒத்தாசை செய்வதற்குப் பிரெஞ்சுக் கூட்டு நடவடிக்கைப் படைகள் தாமதமின்றி அங்குபோய் இறங்கின. சம்பவங்கள் அனுகூலமான முறையில் மாற்றமடைந்திருக்கின்றன.

## மதுரைத் தமிழ்ச்சங்க 'நிர்வாக ஊழல்'

### 'அட்வக்கேட் ஜெனறலுக்கு' மகஜர்

மதுரை செப் 16—

மதுரைத் தமிழ்ச்சங்கம், சட்ட நிபந்தனைகளின்படி சரிவர நிர்வகிக்கப்பட்டு வருவதில்லை என்றும், ஆகவே அச்சங்கத்தின் இப்போதைய தலைவரை அப்பதவியிலிருந்து நீக்க அனுமதி தரும்படியுங் கோரி, அச்சங்க அங்கத்தினர்களான எஸ். சோமசுந்தர பாரதியார், எம். வி. வி. வேலப்பச்செட்டியார், ஆர். எம். கே. எம். எஸ். குமரப்பச் செட்டியார் ஆகிய மூவரும் சென்னை 'அட்வக்கேட் ஜெனர'லுக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள், மகஜரின் நகல், சங்கத் தலைவரான இராமநாதபுரம் ராஜாவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு இவர்கள் பலகாரணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். பிரதானமாகச் சங்கத்தின் வருடாந்த, வாராந்தக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. சங்க நிர்வாகிகளையும் உரிய தவணைக் காலங்களிற் சட்டமுறைப்படி தேர்ந்தெடுப்பதில்லை. சங்கத்தின் சார்பில் நடக்கும் தமிழ்ப் பரீட்சைகளும் பள்ளிக்கூடமும் பத்திரிகைகளும் அச்சுக்கூடமும் ஒழுங்காக நடத்தப்படாமல் உதாசினஞ் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. வருட, வரவு செலவுக் கணக்குகளும் ஒழுங்குபட எழுதி வைக்கப்படவில்லை. இந்த நிர்வாக ஒழுங்கீனமும், அசிரத்தையும் கடந்த 10—12 வருடங்களாக நீடித்திருக்கிறது. ஆகவே, தலைவரை நீக்க வழக்குத்தொடர அனுமதி தரவேண்டும். அல்லது 'அட்வகேட் ஜெனரலா'வது வழக்குத் தொடரவேண்டும் என்று இம் மூவரும் கேட்டிருக்கிறார்கள்.

—தினகரன்

## கொழும்பு நகரை நெருங்கிய சத்துரு விமானம்

### 2 மாதத்திற்குப் பின் அபாய அறிவிப்பு

யூலை மாதம் 19 ம் தேதிக்குப் பின்னர் முதன் முறையாகச் சென்ற திங்கட்கிழமை யன்று அதிகாலை 4 மணியளவில் அபாய அறிவிப்பு ஊதுகுழல்கள் நகரில் சப்திக்கப்பட்டன.

உளவறியும் சத்துரு விமானமொன்று சென்ற திங்கட்கிழமை அதிகாலை கொழும்பை நெருங்கியதாகவும், அப்பொழுது அபாய அறிவிப்பு ஊதுகுழல்கள் சப்திக்கப்பட்டதாகவும் உத்தியோகமுறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறித்த விமானம குண்டுகளை வீசவில்லை.

[illegible] விமானங்கள் சந்திக்குமுன் சத்துரு விமானம் திரும்பிவிட்டது.

## "இந்துமதத்தின் மகத்துவம்"

### சர்வமதப் பிரதிநிதிகளின் மகாநாட்டுத்தினம்

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் சர்வமதப் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்ட தினத்தின் பொன்விழாவை யொட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமைமாலை விவேகானந்தசபை மண்டபத்தில் இராமக்கிருஷ்ண ஆசிரமம் விவேகானந்தசபை ஆகியவற்றின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்திய அரசாங்கப் பிரதிநிதியான மிஸ்றர். எம். எஸ். ஆனே இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். அனேக மக்கள் கூட்டத்திற்குச் சமுகமாயிருந்தனர். தெய்வ வழிபாட்டுடன் கூட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

திரு. என். நடராஜா திரு. ஆனேயை வரவேற்றுப் பேசினார். இந்திய அரசாங்கப் பிரதிநிதி திரு. எம். எஸ். ஆனே பேசும்போது இந்து சமயத்தின் சகிப்புத்தன்மையைப்பற்றிக் குறிப்பிட்டார். ஜனசமூகத்தின் முன்னேற்றத்துக்குச் சகிக்குந் தன்மை அவசியமென்பதை எடுத்துக்கூறும் பொருட்டே சர்வமதப் பிரதிநிதிகள் மகாநாடு கூட்டப்பட்டதாகவும் திரு. ஆனே கூறினர்.

மிஸறர். ஆர். எல். பெறேரா பேசும்போது, மேல்நாடுகளின் உலகப்பற்றுப் பற்றியும் கீழ்நாடுகளின் ஆத்மஞானம் பற்றியும் குறிப்பிட்டார்.

மிஸ்றர் ஜே. ஏ. மார்ட்டென்ஸ் ஒரு கிறிஸ்தவரென்ற முறையில் சுவாமி விவேகானந்தாவைப் புகழ்ந்து பேசினர். உலகப்பற்றுள்ளவர்களென்று மிஸ்றர். பெரேரா குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய அமெரிக்க மக்கள் உண்மையான கிறிஸ்தவர்களல்லரென்றும் மிஸ்றர் மார்ட்டென்ஸ் கூறினர்.

பின்னர், மிஸ்றர் என். கே. சொக்ஸி, டாக்டர் டி. நல்லைநாதன், சுவாமி விபுலானந்தா, சுவாமி சித்தாத்மானந்தா முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

எவரோ ஒருவர் விவேகானந்த சபைக்கு 1000 ரூபா நன்கொடை உதவியதாக அறிவிக்கப்பட்டது.

## புது வைஸ்ராய்

புதுவைஸ்ராய் வேவல் பிரபு அக்டோபர் 20ந் திகதி பதவி ஏற்பாரென்று "யுனைடெட் பிரஸ்" அறிகிறது. அன்று ஒரு தர்பார் நடக்கலாம்.

## ஜனுப் ஜின்னு கத்திக்குத்து வழக்கு

ஜனுப்ஜின்னுவைக் கத்தியினால் குத்தித் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட ரபிக்ஸபிர் பிரஸிடென்ஸி நீதிபதியினால் செஷன்ஸுக்கு விசாரணைக்குக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
புரட்டாதி௴ எஉ வியாழக்கிழமை

## கொண்ட நோக்கம் இதுவல்லவே!

நகரசங்கம், பட்டின சங்கம், கிராமச்சங்கம் முதலிய இப்படியான சங்கங்கள் இந்நாட்டு மக்கள் சுயராச்சியத்தைக் காலகதியில் பெற்றுத் தாமாக நடத்திக்கொள்வரோ என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மேலதிகாரிகள் உதவியன என்று சொல்லுவார்கள்; இந்த நோக்கம் மெய்யென்றே வைத்துக்கொள்வோம். ஆனால், இந்த யாழ்ப்பாணத்திலும் இன்னும் ஏனைய சிலபட்டினங்களிலும் நடக்கும் பட்டின பரிபாலன சங்கங்களின் கொள்கைகளும் முறைகளும் மேலே சொல்லப்பட்டபடிதான் இருக்கின்றனவா? இல்லையே; பட்டினசங்கத்தார் பெரும்பாலும் தங்கள் கடமையென்ன, பட்டினவாசிகள் தங்களைத் தேர்ந்தனுப்பிய நோக்கமென்ன என்ற இந்த உண்மைகளை அறவே மறந்துவிட்டு, தம்நயங்கருதியும், அந்தரங்க பகையைச் சாதித்தும் இடர்ப்படத் தலைப்பட்டுக்கொண்டார்களேயொழிய, பட்டினவாசிகளின் க்ஷேமலாபத்தையிட்டு ஏதுஞ் செய்கிறார்களா? ஐயோ! இவர்கள் இப்படியான சங்கங்களில் வட்டாரப் பிரதிநிதிகளாகவும் நியமன அங்கத்தவர்களாகவும் வருதற்கு அந்த நேரத்திலே பட்டபாடும் கெட்டகேடும் செலவிட்ட பணமும் கொஞ்சமல்லவே. மேலான கருமங்களை, நன்மை பயக்கும் காரியங்களைக் கலந்து யோசித்து ஏகமனசாக நிறைவேற்றிக் கையாளவேண்டியவர்கள் தம்முட் பகைகொண்டு, பாம்பும் கீரியும் போலவும், பாவமும் புண்ணியமும் போலவும், இருட்டும் வெளிச்சமும் போலவும பரஸ்பரம் மாறுபட்டு ஒருவருக்கொருவர் தீமைசெய்யப் புகுந்து தம்மையும் தாம் பரிபாலித்தற்கென்று ஏற்றுக்கொண்ட பட்டினத்தையும் பாழாக்குகிறார்களே!

இனி, கல்விவிருத்தி முதலியன சம்பந்தமான பொதுஸ்தாபனங்களைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சபைகள், சங்கங்கள், கோயில முதலிய சமய ஸ்தாபனங்களின் பரிபாலனத்தை நிர்வகித்துள்ள சங்கங்கள சபைகளின் இக்காலத்து நிலைமையைச் சிறிது ஆராயப்புகின் அவைகளையும் மேலே எடுத்துக்காட்டப்பட்ட பட்டின பரிபாலன சங்கம்போன்ற சங்கங்களைப்பீடித்த வியாதிகளே பீடித்திருப்பக் காண்கின்றோம். கோயில்களைப் பரிபாலிக்கத் தலைப்பட்ட தருமகர்த்தர்களைக்கொண்ட சபைகளிலே கட்சிபேதம் என்னும் பெருவியாதி தலைகொண்டுவிடுகின்றது; பெருமை, அதிகார ஆசை, நான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள், புறங்கூறுதல், குற்றஞ் சுமத்தல் முதலாம் தீமைகளெல்லாம் இப்படியானபரிபாலன சங்கங்களில் முளைத்துப் படருகின்றன. இப்படியான பிரிவினைகளும்தீவினைகளும்புகுந்துவிட, குறித்த கோவிலின் நிர்வாகங்களும், பொருளும், நடக்கும் நித்திய நைமித்தியங்களும் முறை திறம்பிப் பாழாகின்றன. கோயிலுரிமையையிட்டு வியாச்சியங்கள தொடரப்படுகின்றன. இதனால் மேலே சொலலப்பட்ட சபைகள் சங்கங்கள் தாம் கொண்ட நோக்கம் வேறாக மாறிவிட, பல வகையான அநர்த்தங்கள் நேருகின்றன. இன்னும் சமய சம்பந்தமான கருமங்களைச் செய்தற்கென்று நன்னோக்கத்துடன் ஆரம்பிக்கப்பெற்ற சபைகளும் சங்கங்களும உலககைக தேய்ந்து உளிப்பிடியானவாறு, கொண்ட நன்னோக்கம் காலகதியில் மாறி ஈற்றில் விபரீதநிலையையடைகின்றன. இந்தப் பெருமாறுதலுக்குக்காரணமென்னவென்பது ஆராய்தக்கது. "....இருந்த அவைக்குப் பாழ் மூத்தோரை யின்மை....." என்றாங்கு அப்படியான சங்கங்கள் சபைகளில் கல்வியறிவு அநுபவம் வயசு முதலியவற்றில் மேம்பட்ட சான்றோர் நாலுபேர் தானும் இக்காலத்திற் சேர்ந்திராமை ஒரு பிரதான காரணமெனலாம். இந்தக்காலத்திலே எவர்மனத்தும் இல்லாதது தெய்வத்தைப்பற்றிய சிந்தனையாகும்; எவரிடத்தும் உள்ளது யுத்தத்தைப்பற்றிய சிந்தனையேயாகும். அரசனெவ்வழி குடிகளும் அவ்வழியென்ற முதுமொழியை நாம் நன்கு சிந்திக்கவேண்டிய காலமும் இதுவேயாகும்.

## அரசாங்கத்தின் நெற்பங்கு

குருணாக்கலை, செப், 20— உள்நாட்டு நெல வாங்கும் திட்டத்தின் பிரகாரம், விளையும் நெல்லில் மேலதிகமாக வுள்ள பாகம் போரடிக்கும் களத்திலேயே அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படுமென்று, வடமேற்கு மாகாணத் தலைவர் மிஸ்றர். என். ஈ. ஏண்ஸ்ட் சென்ற சனிக்கிழமை ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்தும் பேசுகையில குறிப்பிட்டார். களத்திலிருந்து நெல் அப்புறப்படுத்தப் பட்டுவிட்டால், ஜனங்கள் அதைப் பற்பல தேவைகளுக்கு உபயோகப் படுத்திக் கொண்டு பற்பல சரக்குப் போக்குகள் தெரிவிக்க முற்பட்டு வருவதாக மாகாணத் தலைவர் கூறினார். அரிவிவெட்டில் போதியபலன் கிடைக்கவில்லை யென்றும், எலிகள் நெல்லை ஒழித்துவிட்டன வென்றும் தெரிவிக்கப்படுவதாகவும் அவர் கூறினர்.

சிறும்பாக விளைச்சல் அநேகமாகத் திருப்திகரமாக விருப்பதாகச் சொலலப்படுகிறது. புன்செய்ப் பயிர்களும நல்லபலன் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### "எனக்கொரு குறையுமில்லை"

சொக்கலிங்கனே தன் கணவன் என மனத்தில் வரித்துக்கொண்ட புவனேசுவரி அவனுடைய ஆயுளுக்கு எவ்வகையான இடையூறும் வாராவண்ணம் காத்தற்பொருட்டுத் தெய்வத்தையே அல்லும் பகலும் வேண்டினாள். கார்த்திகைச் சோமவாரம் ஐப்பசி வெள்ளிக்கிழமை சிவராத்திரி நவராத்திரி முதலிய விரதங்களை அவ்வக்காலங்களில் விதிப்படி பத்தி பூர்வமாக அநுட்டித்து வருவாளாயினாள். கிரமமாக ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு தேவாரம் திருவாசகம் அபிராமியந்தாதி கந்தாலங்காரம் முதலிய அருட்பாக்களைப் பாராயணஞ் செய்து வாலானாள். தேவாரத்திலுள்ள கோளறுபதிகத்தைக் காலையும் மாலையும் நியதியோடு ஓதுவாளாயினாள். கந்தபுராணத்துள்ள மார்க்கண்டேயப் படலத்தை விரதகாலங்களிலும் புண்ணிய தினங்களிலும் படனஞ்செய்துவருவாள். தன் இளைய மகள் சிலகாலமாகப் பூண்டுள்ள பத்திக்குரிய கொள்கைகளையும் விரதாநுஷ்டானங்களையும் தெய்வ வழிபாட்டையும் அவளுடைய நோக்கத்தையும் உணர்ந்த சின்னம்மாள் அவளைப் பாராட்டித் தனது மற்றைய மக்களாகிய நகுலேசுவரிக்கும குமாரசுவாமிக்கும் கந்தசுவாமிக்கும் சொல்லிச் சந்தோஷப்படுவாள்; சிவகாமித்தாயும் ஒருதினம் சின்னம்மாள வீட்டிற்குச் சென்றவிடத்துப் புவனேசுவரியின் பத்தி வைராக்கியத்தைச் சின்னம்மாள் சொல்லக்கேட்டு அற்புதமடைந்தாள்; சண்பகத்தம்மாள் புவனத்தைத் தனது அரிய மருகியாகவும் காஞ்சனமாலை அவளைத் தனது அன்பான மைத்துனியாகவும் பாவித்து முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு அன்பு பாராட்டி அவளோடு ஊடாடுவாராயினர். ஒரு தினம் சண்பகத்தம்மாள் புவனத்திற்கென்று சிறந்த ஆடைகளையும் சில ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டு தன் மகளோடு சின்னம்மாள் வீட்டிற்குத் தங்கள் இரதத்தில் ஏறிக்கொண்டு வந்தார்கள. வந்த தாயும் மகளும புவனத்தின் தூய வாழ்க்கையையும் சிவபத்தித் திறத்தையும் மேலான நோக்கத்தையும் அவதானித்தார்கள்; சண்பகத்தம்மாள் தான் கொண்டுவந்த ஆடையாபரணங்களை அவளிடங் கொடுக்க அவள் தன் இருகரங்களையும் நீட்டிப் பணிவோடு அவைகளை வாங்கிக்கொண்டு சண்பகத்தம்மாளைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்குதலும சண்பகம் மனந்தரிடாளாய்த் தன் இருகரங்களாலும் அவளை அணைத்தெடுத்துப் பக்கத்தில் இருத்தி அவளுடைய முகத்தைத் தடவி "கண்ணே, எங்கள் குடியை வாழ்விக்கப் பிறந்த தவக்கொழுந்தே, இது என்ன கோலமடியம்மா, இந்தச் சின்னஞ் சிறு வயதிலே அரிய பெரிய விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கி உணவை வெறுத்துத் தேகத்தை மெலிய வைத்துவிட்டாயே; உமக்கு எவ்வகையான கவலையும் நேர அந்தப்பெருமான் விடமாட்டார்; மேலும், எங்கள் செல்வமே நாங்கள் செய்யவேண்டிய செபதவங்களையும் தெய்வ வழிபாட்டையும் நீரல்லவா செய்யத் தொடங்கியிருக்கிறீர்; இதுவும எங்கள் பாக்கியந் தான" என்று மனமுருக ஆநந்தம் பெருக கண்ணீர் சோரப் பன்னினள். அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த புவனம் "எனக்கு ஒரு குறையுமில்லை அம்மா" என்று விநயத்தோடு கிளியென மொழிந்தாள். இவைகளையெல்லாம் காஞ்சனமாலையும் அன்பும் மகிழ்ச்சியும் உண்டாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அன்றுதொடக்கமாகச் சண்பகத்தம்மாளும் மகளும் சின்னம்மாள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவாராயினர்.

### "உங்கள் அண்ணா வருவார்போலிருக்கிறது"

காஞ்சனமாலை தன் தமையனுக்குக் கடிதமெழுதும்போது புவனேசுவரியின் நோக்கங்கள், செயல்கள், தங்களிடத்துள்ள பற்று முதலிய இவைகளைப் பற்றியும் எழுதி வந்தாள். தங்கள் தாயின் விருப்பத்தின்படியே காஞ்சனம் அந்த விஷயங்களைத் தமையனுக்கு எழுதினாள்; தமையனும் அவைகளைப் படித்துப் படித்துப் புவனேசுவரியிடத்து அன்பும் தன் பொல்லாத காலத்தையிட்டுக் கவலையும் அடைந்தான். பூரண ஆயுள் இல்லாத தன்னிடத்தில் அந்த உத்தம கன்னிகை விசுவாசம் வைத்துவிட்டாளே என்பதுதான் சொக்கலிங்கனுக்கு உண்டான கவலைக்குக் காரணம். அவன் தன் தாய் சகோதரியென்னு மிருவருக்கும் எழுதிய ஒரு கடிதத்திலே "...கற்பிற் சிறந்தவளென்று உலகத்தவராற்பாராட்டப்படும் சாவித்திரியும் சத்தியவானை மணஞ்செய்த பின்பே அவனுடைய உயிரைக் காக்கவேண்டுமெனத் தேவிக்குரிய விரதத்தை அநுட்டித்துத் தேவியைப் பூசித்து மங்கல்யப் பிச்சை தரும்படி யாசித்தாளெனப் பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் உங்கள் அருமையான புவனேசுவரியெனிலோ, தான் மனத்தில் வரித்த நாயகனை மணஞ்செய்ய முந்தியே அவனுடைய சேமத்தின் பொருட்டும் நீடிய ஆயுளின் பொருட்டும் தெய்வத்தை வேண்டி விரதாநுஷ்டானங்களைப் பயபக்தியோடு கடைப்பிடித்தொழுகலானாள்; இந்தக் காலத்தில் இப்படியான உத்தம கன்னிகையைத் தேடிக்கொள்ளல் அரிது; இதுவும தெய்வத்தின் சோதனைபோலும்; கற்பிற் சிறந்த கன்னிகையின விண்ணப்பத்தைக் கருணாநிதியாகிய இறைவன் ஈதலின்றி மறுத்தல் முடியாது..." என்று இந்தவிதமாக எழுதியிருந்தான். இந்தக் கடிதத்தைக் காஞ்சனமாலை தன் தாயுடன் சின்னம்மாள் வீட்டிற்குப் போனபோது கொண்டுபோய் யாருமறியாதபடி புவனேசுவரியிடம் கொடுக்க, அவளும அதனை வாங்கிக் கண்களில் ஒற்றி மெல்ல விரித்து ஒருமுறை இருமுறை மும்முறை படித்து மனமுருகப்பெற்றாள். அந்தக் கடிதத்தின் ஈற்றிலே "இப்பொழுது அயனுக்குப் பரீட்சைநடக்கிறது. ஆனதினால் உங்களுக்கு அதிகமெழுதச் சமயமில்லை; குறையெண்ணவேண்டாம்; இந்த வெள்ளிக்கிழமை எங்கள் கலலூரி விடுதலை நாள் தொடங்குகின்றது; வெள்ளிக்கிழமை மாலை நான் இவ்விடமிருந்து புறப்படுவேன்..." என்ற இந்த வாக்கியங்களும் எழுதப்பட்டிருந்தன; இவற்றைக் கண்ணுற்ற புவனேசுவரி பேரானந்தமடைந்தாளாய் 'தங்கைச்சி, உங்கள் அண்ணா இன்னும் இரண்டு மூன்று தினத்தில் இங்கேவந்துவிடுவார்போலிருக்கிறது" என்று ஆவலோடும் முகமலர்ச்சியோடும் கேட்க "ஆம், அக்கா, வந்துவிடுவதாகத்தான உந்தக் காகிதத்தில் எழுதியிருக்கி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்திரு! விழித்திரு!! பரத்தினைச்சாரப் பசித்திரு!!!

## விவேகாநந்தரின் வீரமுழக்கம்

(சுவாமி நடராஜானந்தா, இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு)

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கநாட்டின் சிகாகோ நகரத்தில் கூடிய சர்வமத மகாநாட்டு மேடையில் 1893ம் ஹு புரட்டாதிமாதம் 11ந் திகதி திங்கட்கிழமை ஒரு இளைஞன் தோன்றி அமெரிக்க மக்களை "சகோதரிகளே சகோதரர்களே' என்னும் அமிர்த மொழிகளால் வாழ்த்தி அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தான். அவனே ஒரு தனிப்பட்ட சமயத்தின் பிரதிநிதியன்று; ஆனல் எல்லா மதங்களின் இந்திய பிரதிநிதியாக விளங்கினன். அவன் பெயர்தான் சுவாமி விவேகானந்தா. இந்து தர்மத்துக்குப் புத்துயிரளித்து இந்தியரின் மானத்தைக் காப்பாற்றியவர். இந்த உலகப் பிரசித்திபெற்ற மகாசபையின் பொன்விழா இம்மாதம் 11ந் திகதி தொடக்கம் 26ந் திகதிவரை இந்துமக்கள் வாழுமிடமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படும் அத்தருணம் பல அறிஞர்கள் கூறும் பொன்மொழிகளோடு இச்சிறு கட்டுரையையும் என் மனமார்ந்த அர்ப்பணமாகச் சுவாமிகளின் திருவடிகளுக்கு அர்ப்பணஞ் செய்கின்றேன்.

ஸ்ரீராம கிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் பூவும் மணமும், அறிவும் ஆற்றலும், மணியும் ஒலியும்போன்று ஒன்றே. பரமஹம்சரின்சக்தியே விவேகானந்தரின் வாக்கில கர்ஜித்தது. ஸ்ரீராம கிருஷ்ணர் பன்னிரண்டு ஆண்டுகள் அருந்தவஞ் செய்து இந்துதர்மத்தின் அந்தரங்க உண்மைகளை மட்டுமன்றி ஏனைய மதங்களின் அநுபவங்களையும் பரீக்ஷிததுப் பார்தது, அவையெல்லாம் ஒரே இலட்சியத்துக்கு இட்டுச் செல்கின்றன என்னும் வேதவாக்கியத்தைத் தமது வாழ்வில விளக்கிக் காட்டினர். ஆம்மகானுபாவருடைய வாழ்வின் நலங்கண்டு சுவாமி விவேகானந்தர் அவருடைய சீடரானர். தமது சீடரின் பரிபக்குவத்தை உள்நோக்கலுல் உணர்ந்த பரமஹம்சரும், அவருடைய மனோநிலைக் கேற்ப அத்வைத வேதாந்த உண்மைகளை உபதேசித்து, அவற்றை அனுபவவாயிலாக உணரும் மார்க்கததையுங் கற்றுக் கொடுத்தார். குருநாதர் மஹா சமாதியடைவதற்குச் சில தினங்களுக்குமுன் ஸ்பரிச தீக்ஷையின மூலம் அவர் சேமிததுவைத்திருந்த ஆதமஞானப் பொக்கிஷத்தைத் தன செல்வனுகிய சுவாமி விவேகானந்தருக்கு வழங்கி அதைக்கொண்டு மக்களுக்கு அருட்பணி செய்யும் படி கட்டளையிட்டார்.

குருநாதரின் அருட்பணி இன்னவென்று சுவாமிகளுக்கு அப்பொழுது புலப்படவில்லை. அது என்னவென்று அறியும்பொருட்டுத் தன்னந் தனியாகப் பாரத நாடெங்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். பிரயாணம் முடிந்ததும், இந்தியாவின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி அன்னையின் முன்னிலையில் உட்கார்ந்து, தான் பரிவிராஜிக் காலத்தில் கண்ட பாரதமக்களின் பரிதாபக் காட்சிகளை நினைந்து சிந்தனையில் ஆழ்ந்தார். உள்ளத்தில் ஒரு வழி தோனறிற்று, இன்பம் ஊற்றெடுத்தது; அடங்கா மகிழ்ச்சியுடன எழுந்து பாரதத்தேவியை நோக்கி, "எழுந்திரு பாரதத்தாயே! உனது புண்ணியக் கோயிலை மலைமுதல் முனை மட்டும் காலால் அளந்து புனிதமானேன். தாயே! உனது உண்மை ஞானம் பருகி உய்ய உலகனனை பசிதவிக்கின்றுள். ஞானத் தாயே! தீரரின் அன்னையே! உனது வேதாந்தச் சங்கை முழக்கு! கனவொழிந்தது, காலை புலர்ந்தது, கனமலர் திறந்தெழு தாயே! சனுதன தர்மமே உனது புனித உடலில காலக்கேட்டால் அழுக்குப்படிந்துள்ளது. சாதிக்கொடுமையும் வைதீகச் செருக்கும், மடமையும், வறுமையும், சிறுமையும் உன்னை அரித்துதின்கின்றன; தரித்திர நாராயணர் பசி, பசி என்று தவிக்கின்றனர்; ஒடுக்கப்பட்ட திருக்குல நாராயணர் சிறுமையுள சிக்கித தவிக்கின்றனர்; காயும் வயிற்றில் ஞானம் ஏறுமா? பட்டினியால் தவிக்கையில் பரமார்த்தம் பிடிக்குமா? வறுமை தணிக! நல்ல கலவி பரவுக! பிறகே ஆதமஞானம் வேர் பிடிக்கும். அன்னையின் அருட்பணிக்குத் தொண்டரும், பணமும் வேண்டும். துறவி நான என்செய்வேன். மனனவர் மாளிகைகளிலும், வறிஞர் குடிலிலும் வசித்தேன்; இந்த நாட்டை உயர்த்துவதற்கு எனது நோக்கங்களைப் பல மன்னரிடமும், அறிஞரிடமும் தெளிவாக வெளியிட்டேன். உதட்டுதவியே கிடைத்தது. பணத்திற்கு ஏழைப் பாரதநாட்டை எதிர்பார்த்துப் பயனில்லை; மேனுடு செல்கின்றேன்; என்—தெய்வங்கள்-வறுமைத தெய்வங்கள்—வருந்தும தெய்வங்கள்-தாழ்வுண்ட தெய்வங்கள்-எல்லாச் சாதி வகுப்புத் தெய்வஙகளுக்கும் பணிபுரிய எனது சீவியததை அர்ப்பணஞ் செய்கின்றேன. பாரத சமூகததின் முனனேறறம் ஆத்மஞானத்திலுளளது. அதை ஒரு அகண்ட வேதாந்த சமூதாயமாக்க வேணடும். இதுவே எனது குருநாதனின அருட்பணி" எனத் தெளிவுகொண்டார்.

சுவாமி விவேகானந்தரின் அருமையையும் பெருமையையும் கண்டு பிடிக்கும் பாககியம் தென்னுட்டு மக்களுக்குக் கிடைததது. அமெரிக்க நாட்டில் நடந்த சர்வமத மகா சபைகளுக்கு இந்துமதப் பிரதிநிதியாகப் போகும்படி தமிழ் நாட்டிலுள்ள சில பிரமுகர்கள் சுவாமிகளைத் தூண்டினர். தெய்வ அன்னை சாரதா தேவியின ஆசீர்வாததததையும் பெற்றுக்கொண்டு விவேகானந்தர் கப்பலேறுவதற்குப் பமபாய் சென்றார். அஙகு தமது ஆத்மீக சகோதரரான துரியானந்த சுவாமிகளைச் சந்திததார். அவரைப் பார்த்து, "ஹரிபாய்! நீங்கள் தர்மமென்று கூறுவதை என்னல் விளங்கிக் கொள்ள முடியவில்லை; ஆனல் ஒரு உண்மை மட்டும் உஙகளுககுத திடமாக நான் கூறவியலும். பாரத நாட்டு யாத்திரையின பயனுக என் மனம் மிகவும் விரிந்துள்ளது; பிறர் துன்பத்தை என் துன்பமாக உணருவதற்குக் கற்றுக்கொண்டேன். பிறர் துன்பங்கண்டு என்மனம் மிகவும் வருந்துகின்றது" என வார்த்தைகளைத் தாங்கள் உறுதியாக நமபலாம எனக் கூறினர். இதெலலாம வெறும வார்த்தைகளலல; இவை இதயத்திலிருந்து எழும உணர்ச்சி ததும்பும் உருக்கமானமொழிகள். இதறகு அத்தாட்சியாக சுவாமிகளுடைய கணகளிலிருந்து தாரை தாரையாகக் கண

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# மணிப்பிரவாள வசனம் 3

(திரு. அ வி. மயில்வாகனம், ரேயல்கல்லூரி)

## வைணவ நூல்கள்

நாலாயிரப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் அதிகம் வடசொல் வழங்கவில்லை. ஆனல், அவர்கள் வேதங்களை நன்கு கற்றுத் தேறியிருந்தமைக்கு அத்தாட்சிகள் உள. உ-ம் * "ஸவ்ரேஸ்வரன் பக்கலிலே ஸவ்ராத்ரக்ரஹணம் பண்ணின ஆழ்வார் அருளிச் செய்தார் etc." எனினும் பின்வந்த ஆச்சாரியர்கள இவற்றிற்கு மணிப்பிரவாளத்தில உரையெழுதி விட்டனர். இவர் நோக்கம யாவரும், இவ்வுரைகளைக் கறக வேண்டுமென்பதே யல்லாமல் அனைரியரை வடமொழி வலிந்து பயிற்றுவிப்பது மன்றிக் கலப்புத் தமிழை உண்டுபண்ண வேண்டுமென்பதுமன்று. மேலும், இவருள் பிளளையுறங்கா விலலியும திருப்பாணாழ்வாரும் குறைந்த சாதியினரென்பம அறிக. இவர்களுமே அந்நடையில எழுதியவர்களாவர். இவர்களுடைய உரைகள் வாசிக்க இனிமை பயக்கும். ஆகலின் இவர்கள் நோக்கம் வேறு என்க.

வைணவ உரைகளுள் மிகச் சிறந்தது நம்மாழ்வார் பிரபந்த உரையே. இது (3001—4000) பாட்டுவரைக்குமெழுதியுளது. இதன் உரைகளை கிரைப்படுத்தின் பின் வருமாறு அமையும்:- 1. ஆறுயிரப்படி Measure, 2. ஒன்பதினுயிரப்படி, 3. பன்னீராயிரப்படி, 4. இருபத்து நாலாயிரப்படி, 5. முப்பத்தாறுயிரப்படி.

இவற்றுட் கடையதற்கே 'ஈடு' என்று பெயர். இங்கே 'படி' என்பதை விளக்குவாம். மெய்யெழுத்துக்களை நீக்கி எண்ண, 32 எழுத்துக்களின் தொகை வருமாயின அதுவே ஒரு 'படி' அல்லது 'அளவை' யாகக் கொள்ளப்படும். இந்த ரீதியாக ஆறுயிரப்படியைக் கணக்கிட்டால், 6000×—192,000 மெய் நீங்கிய எழுததுக்கள் ஆளப்பட்டமை அறியலாகும். இப்படியே ஏனையவும் மெய் நீங்கலாக, 288,000, 384000, 768000, 1152,000 எழுத்துக்களைக் கொண்டு எழுந்தனவெனக் கணக்கிடலாம். ஆனல், இந்த முறையில் உரை எழுதுவது மிகவும் கடினமாக விருக்குமே. ஆயினும், குறிக்கப்பட்ட சொற்களுள் ஓர் உரையை எழுதி முடித்துவிடுவதானல் அதுவும் எளிதன்று. மிகநுணுகிய அறிவாற்றல வேண்டும். குறித்த தொகையை மீறுமல் இருததற்குச் சொல்லாட்சியும் சிறபபா வேண்டும். ஆதலின், இவ்வுரையாசிரியன்மார் சாமானியரான்றென உணர்க. இவ்வுரைகள 12—14 ஆம் நூற்றுண்டுவரையில் எழுந்தவை.

இவற்றைப் பற்றி இன்னெரு சிறப்பு என்னவானல் மேற்கூறிய இட்டிறகு வேறும இரண்டு உரைகள இருப்பதுதான். † இவை ஈட்டிலும மிகமிக விரிவுடையன. அதனுட் காணப்படும் கடும் பதங்களை விளக்கி மேற்கோளும் தரப்பட்டுளளமையால் ஈட்டை விளங்கிக் கொள்ளல் எளிதாகின்றது. ஆனல், இதனுள எடுததுக்காட்டுகள் பல தெலுங்கு மொழியி லிருப்பதால அம்மொழி அறிவும் உண்டானல விளககம இன்னும எளிதாகும். இன்னுஞ் சில வடமொழிச் சொற்கள் தெலுங்கு லிபியில எழுதியுள.

இவை அளவிறந் துள்ளனவாயினும் கிரந்த எழுத்துக்களும் விரவாமல் இல்லை. இவற்றை ஆதான் ஜீயர், அடையவளைந்தான் ஜீயர் என்போர் 14-ஆம் நூற்றுண்டளவில் எழுதினர். (இங்கு 'அடையவளைந்தா' னென்பது திரு அரங்கத்தின் ஏழாவது மதிலின் பெயராகும்.) மேற்கூறிய உரைகளுள் ஒன்றுமாத்திரம் தெலுங்கில் அச்சாகி யுளது. இவ்வாசிரியன்மார் வடமொழி வல்லாராதலின அதிகம் சங்கதமும் சிறிது தமிழும் பலகிராமீய வழக்கும் உரையுள் தந்துளர். சில வினைமுடிபுகள்—இறே, இக்கே, கிடீர், கிடாய், கோல், செய்கின்றன, ஆயற்றன்பன. தமிழிற்குச் சிறப்பான 'ழ' எனுமெழுத்து மிக அருமையாகவே வழங்கியுளது. ஆகபுழுதி, விழு, வழி, ஒழி, கிழ, சூழ் என்ற சிறுசொற்கள் மாத்திரம் அபூர்வமாக வரும். பெரும்பாலும் ழகரன் ஏற்குஞ் சொற்கள் உபயோகத்தில் இலலாமை ஆசிரியன்மாரின் தமிழறிவின் மட்டத்தைக் காட்டும்.

இனி, ஆறுயிரப்படியைப் பார்ப்போம். இது12-ம்ஆம் நூற்றுண்டு வரையில் திருக்குருக்கைப்பிரான் பிள்ளை எழுதிய உரை. இதனுள்ளும் வினைமுற்றுகளின் வழுவிய வழக்காகிய ஆகையாலிறே, கடவதிறே என்பன உள. இதற்கு நியாயமான ஒரு விளக்கம் யாதெனில், உரையை வலுவுறுத்தவரும் 'அன்றே' என்னுஞ் சொல் வசனத்தின் கடைசிச் சொல்லிற்கு முன்னையதுடன் புணரும்பொழுது 'அ' விற்கு 'இ'யைபிட்டு, 'இன்றே'யாக்கிப் பின் இடைக்குறை செய்து 'இறே' யாக்கிவிடுவது ஒன்று. சில விடங்களில் 'அன்றே' என்னும் அசை 'இக்கு'ச் சாரியை ஏற்று— 'அன்றிக்கே' ஆகிவிடுகின்றது. வேறு சில விடங்களில் 'இட்டீர்' என்னும் முடிபுதான் இடைக்குறையாகி 'இடீர்' 'கிடீர்' ஆயிற்று என்பர் உச்சாரண வேறுபாட்டறிஞர். மணிப்பிரவாள நூலுட் சேர்வுடைய -ஏவம்விதர், இத்தியாதி ✳ என்னுஞ் சொற்கள் தமிழ்நூல் வழக்கிலும் இடம் பெற்றுவிட்டன. மேலும், 'ன' விற்கு 'ந' வை உபயோகித்தலும் தமிழ்ச் சொல்லைக் கிரந்த இலிபியில் எழுதுதலும் சிற்சிலவிடங்களில் இதனுள் காணகின்றன. உதாரணமாக:- முநிகள், பஜநம், ஆபிதாநம், தநியன், பெல்லு-என்பனவற்றுள் கடைசி இரண்டையும் கூர்ந்து நோக்குக. இவைநிற்க.

இனி, ராமர், ராவணர், ப்ரமாணம், இப்ப்ரபந்தம், வ்யாக்யானம், ப்ரகடநம், தேவாதிபாஂ etc என்பன பலப்பலவுளவாதலின் இலக்கணவரம் பிறந்து இவ்வுரைகள் அப்பால் நிற்கின்றனவென முடிக்க! மேலும் (ப 21) உள் "சொல்லாயிற்று இப்பிரபந்தங்கள்"; என வினைமுடிபு செய்யுங்கால ஆசிரியர் ஒருமை பன்மையையும் வழுவவிடுத்தனர். ஆனல் இஃது அபூர்வம். ஆதலின் இலக்கண முறைப்படி பங்கீகாரஞ்செய்ய இவ்வசனங்கள் இடந்தரா.

முதற்பாட்டின் முதல் இரண்டு சொறகளுக்கும் உரை வருமாறு- "உயர்வற உயர்நலம்-அப்ராக்ருதஸ் வாஸாதாரண திவ்யரூப பூஷணயுதம் இருஷிபரிஜநஸ்தாநவ பரிஷ்டனாய் நிகிலஜகதுதய விபவாதிலீலனுயிருந்த பரம புருஷனை உள்ளப

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

* Rahasyatrayam p. 305, Edn. 1920.

† ஆகாஙூற்றிற்கும் செய்யுளுரை ... அதற்கு வசனவுரை ... இருந்ததாகக் கதை.

✳ நமமுனனோளித்த பெருஞ் செலவம் 1938, edn.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழமை

(திருமயிலை, திருவாளர்
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை)

பழமை என்பது தொன்றுதொட்டு வழக்கத்தில்கைக்கொள்ளப்பட்டு வருங் கொள்கை. இது பாரம்பரியம் எனவும்படும். பழமையெல்லாம் மடமையென்பதும் புதுமைகளே விவேக சம்பிரதாயம் என்பதும் இக்காலத்தவர் கருத்து. இந்தக் கருத்து பாரம்பரியத்தாற் சிறிதாவது சிறப்படையாதிருந்த மேலைத் தேசங்களுக் கேற்றதேயன்றி பலவகைக் கலைஞானங்களையும் பழமையாற் பெற்றுள்ள நமது நாட்டுக்குச் சிறிதாவது பொருந்தாது. மேலைத் தேசங்கள் முற்காலத்தில் பெரிதும் அறியாமையின் மூழ்கிக் கிடந்து இக்காலததே அறிவின் விருத்தியுற்று விளங்குகின்றன. நமது தேசம் முற்காலத்திற் பேரறிவுற்று விளங்கி இப்போது விருத்தியற்றுக் கிடக்கின்றது. ஆகவே மேலைத்தேசத்தார் பழமையை இழித்துரைத்தலைக் கண்டு நாமும் நமது பழமையை ஏளனஞ் செய்யத்துணிவது பேதைமையின்பாற் படுவதாகும்.

எமது பழமையின் அருமைபெருமைகளை யெல்லாம் நாம மறந்துதுக்கத்திற் கிடந்தவோர் காலம் இருந்ததென்பது உண்மை. அக்காலம் இப்போது சிறிது சிறிதாக நீங்க நாம் சற்றே கண்விழிக்குமாற்றால் அப் பாரம்பரியங்களையெல்லாம் அறியாமை யென்று புறங்கண்டொதுக்குதல் விவேக தருமமாகாது. எமது பாரம்பரியங்களின் கண்ணே பலப்பல பரம சத்தியங்கள் பொதிந்துள்ளவாதலால் அச்சத்திய விசேஷங்களை நாம் ஆராய்ந்து காணுதலின்றி அவற்றை அறியாமையெனக் கொண்டொதுக்குவது விலையுயர்ந்த இரத்தினமொன்றைப் பாறகல்லெனக் கொண்டு குப்பையில் வீசியெறிவது போலாகும்.

இத்தப் பாரம்பரியங்களையும் நாம் சந்தேகித்தல் வேண்டுமென்பதும், இவற்றின்கண் யாதொரு உண்மை காணப்பட்டாலன்றி அவற்றைக் கைக்கொள்வது யுத்தமாகாதெனபதும் சந்தேகவாதிகளது துணிபு. நமது முன்னோர் கண்டுரைத்த அருமருந்தன்ன அந்தரங்க உண்மைகளையெல்லாம் அவை பழமைபடைத்தமைபற்றி சந்தேகிப்பதுண்டேனில நாம் விருத்தி பெறுவது சிறிதும் கூடாது. உலகத்திலே எவ்வெவரும் தத்தமது அறிவு கொண்டு அறிந்த துறைகளையே நம்புதல் வேண்டுமென்னும் நியதி இருக்குமாயின் எந்தச் சாதியாராவது விருத்தி பெறுவது கூடாது. மானுடரெலலாம் ஒருவருககொருவர் துணையாகி ஒருவர் கண்டுவைத்த காட்சியை மற்றையோர் நம்பி, அந்நம்பிக்கையின் வழி ஒழுகுவதனாற்றானே அவர்களனைவரும விருத்தியுறுவது. இது மானுடர்க்குரியதோர் பெருஞ் சலாக்கியமாகும். இந்தச் சலாக்கியததை நாம் புறக்கணிப்பதுண்டாயின நாம் விருத்தியுறுவது சிறிதுங் கூடாது.

இந்தச் சலாக்கியத்தைப் போற்ற வேண்டியது மற்றைச் சாதியார் எவரினும் பார்க்க நமக்குச் சிறந்ததோர் சாதனமாகும். என்னை! மற்றைச் சாதியார் எவருக்காவது இத்துணைச் சிறந்த பாரம்பரியம் சிறிதும் இல்லை. நமக்குப் பாரம்பரியமாகிய பெரிய பொக்கிஷம் அமைந்து கிடக்கும்போது அதனை அசட்டை செய்துவிட்டு விருத்திபெறக் கருதுவது முடியாத காரியம்.

(தொடரும்)

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

## வெள்ளி செப் 24

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பி கே அருணசல அண்ணுவி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 பி கே அருணசல அண்ணுவி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு

மாலை 5 கே என் ராஜம் கே என் கமலம் பாட்டு 5-40 தூரான்—ஷரீப் 6 திருப்பாம்புரம் டி. எஸ். எஸ். மீனுக்ஷி சுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45ஸ்வர்க்கத்திலிருந்து மீனுக்ஷி 8 திருப்பாம்புரம் டி எஸ் எஸ் மீனுக்ஷி சுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 திரைஇசை†10-30முடிவு.

## சனி செப் 25

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இருவர் இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பாபநாசம் எஸ் பாலசரஸ்வதி வயலின் 9 முடிவு.

1 எம் ஆர் வாஸவாம்பாள் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அருணசலக் கவிராயர் பாடல்கள் † 2 தமிழில் செய்திகள் 2-05 பாபநாசம் எஸ் பாலசரஸ்வதி வயலின் 2-30 முடிவு.

மாலை 5 எம் ஆர் வாஸவாம்பாள் பாட்டு 5-40 ஸ்கந்தபுராணம் 6 திரைக் கதம்பம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இஸ்லாமிய பண்பாடு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 என் ஸி வஸந்தகோகிலம் பாட்டு 9-15 ஸ்டேகப்பா † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 எம் எஸ் சுப்புலக்ஷ்மி † 10 தசாவதாரம் 10-30 முடிவு.

## ஞாயிறு செப் 26

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலை கீதம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 அன்னபூரணி வைத்திய நாதன் வீணை பாட்டு 9 முடிவு.

12 திரைக்கதம்பம் † 12-30 ஒலி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் ராமநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு2-30 முடிவு.

மாலை 5 எஸ் ராமநாதன் பாட்டு5-40 தேவாராதனை 6 அன்னபூரணி வைத்திய நாதன் வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஒரு தூடையும் எண்திசையும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திருப்பாம்புரம் டி என் சுவாமிநாத பிள்ளை புல்லாங்குழல் 9 சர்வகலா சாலைகளுக்கு 9-15 ஹீராபாய் படோடேகர் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள்9-45 இரு வயலின்கள் 10-00 இசைவேளை † 10-30 முடிவு.

## திங்கள் செப் 27

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 முடிகொண்டான் ஏ ராஜமாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஆர் துஞ்சம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 முடிகொண்டான் ஏ ராஜமாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 எம் ஆர் துஞ்சம்மாள் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 சாத்தூர் ஏ ஜி சுப்ரமணியம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் ஸிதார் 10 பக்தி இசை 10-30 முடிவு.

# மணிப்பிரவாள வசனம் 3

3-ம் பக்கத் தொடர்ச்சி

டியே ஆழ்வார் தாம் தம்முடைய திருவுள்ளத்தாலே அநுபவித்து அவ்வநுபவஜநிதமான நிரவதிகப் ரீதியாலே அவனை அனுபவித்த படியே பேசுகிறார்." இதனுள் வடசொல் நூற்றுக்கு 68 வீதம் வந்துளது. உரிச்சொற்களும் இடைமொழிகளும் பெரும்பாலும் வடசொல்லாயினும் வினைமுற்றுக்கள் கட்டாயம் தமிழாகவேயிருக்கும்.

அடுத்தது ஒன்பதினாயிரப்படி. இதனை நஞ்ஜீய=ரென்பார் 12 ஆம் நூற்றாண்டளவில் எழுதி முடித்தார். இதற்கும் முன்னையதிற்கும் அதிகம் வித்தியாசமில்லையாயினும் இது சிறிது விரிந்துளது. முற்கூறிய முதல் இரண்டு சொல்லிற்கும் இவர்கூறும் கருத்து வருமாறு:— (முதற்பாட்டுக் கருத்து) அகிய ஹேயப்ரத்யநீககல்யாண குணனாய்; குணங்களுக்கு நிறங்கொடுக்கவற்றான திவ்யவிக்ரஹயுக்தனாய் ஸௌந்தர்யாதிகளுக்கு போக்தாக்களான அயர்வறுமமரர்களதிபதியாயிருந்து வைத்துத் தன்னுடைய நிரவதிகக்ருபையாலே என்னுடைய தோஷாகரதையைப் பாராதே என்னுடைய அஜ்ஞானமெல்லாம் நீங்கும்படி ஸ்வவிஷயபக்திரூபஜ்ஞானத்தை etc...."

இவ்வசனத்துள் இன்னும் கூடிய விகிதம் தமிழ் பாவிக்கப்படுகின்றது. 'வைத்து' என்னுஞ் சொல் வழக்கும் வருகிறது. மலையாளம், திருநெல்வேலி முதலியவிடங்களில் இவ்வழக்கு இன்றுமுண்டு. ✳வசனங்கள் மாத்திரம் நீளமானவை,

அடுத்தது 12,000 ப்படி உரையாகும். இதனை எழுதியவர் வேதிகேசரி அழகிய மணவாளஜீயர் என்பவர். இது சொலவிளக்கம் சொற்றொடர் விளக்கம் இரண்டும் சிறந்துடையது. உயர்வு, அற, உயர், நலம், உடைய அவன் etc என்று பிரித்து உரைகூறப்படும்.

மூலத்திலுள்ள சொல்லடுக்குகளின் சிறப்பை எடுத்து விதந்தோதும்முறை இங்கே சிறந்துளது. வடமொழிக்கலப்பு நூற்றுக்கு 70 வீதம் உண்டு. வடமொழிச் சமாசங்களும் அப்படியே தமிழில் வந்துள. தமிழில் அவற்றின் அழகு கெட்டுவிடுகிறது. தெற்றெனத் தோன்றும். 'அல்லாத உயர்த்திகள் என்பது வடமொழியில் "பகுவ்ரீஹி" சமாசமாகும். அதனை— "விஹீநஸ்ரேஷ:" என்று கூறுவோம. வீரசோழியததார் பல மொழித்தொகை 'எனபதும் இதனையே'.

இருபத்து நாலாயிரப்படி எழுதியவர் பெரியவாச்சான்பிள்ளை. எல்லாப்படியாலும் இவ்வுரை முற்கூறிய உரைகளைப்போன்றேயுளது, கருத்துக்கள் கொஞ்சம் விரிவாகவிருக்கும். நடை, பொருளாட்சி, அலங்கணப்புணர்ச்சி, வடசொற்பிரயோகம முதலியன முன்போன்றே காணப்படும.

36,000 ப்படி என்னும் உரை 'ஈடு' ஆகும். இதனை நம்பிள்ளையென்பார் தமது மாணவருள் ஒருவருக்குச் சொல்ல, அவர் எழுதி முடித்தனர் எனப. தமிழ்நூற்பரப்புள் இதுவே நீண்ட உரைநூலாகும். இதன் முகவுரையே ஒரு தனிப்புத்தகமுமாகலாம். பெரும்பாலும் கிரந்தத்திலே எழுதும் வந்ததுககாட்டுகள் இங்கு தமிழிலும்§ வந்துள. வலீவ நாம் கூறிய

படி, இல்வுரை விளங்குவதானால் இதன்மேல எழுதிய ஏனைய இரண்டு உரையும் படித்தல் வேண்டும்.

ஈட்டிலுள்ள சில சொற்களுக்கு ஆத்தன் ஜீயர் எழுதிய பேருரையுள் விபரீத விளக்கங்களும் உள.

உ-ம்.- கூட்டுகை=உபதேசிக்கை
கிண்ணகம்=ப்ரவாஹம்
நேர்=எதிர்
ஸீபீபூயம்=ஸீபத்வம்
மங்களபதம்=மங்களபதப்ரயோகம்
எடுப்பு=அதிசயம்
சிறு=க்ஷீ,த்ரம்
மாளும்=நஸிக்கும், என்பன.

இதனுள் தமிழ்ச் சொற்களுக்கு வடமொழி விளக்கம் இருப்பதால்' ஆசிரியர் தம் வாசகருக்கு வடமொழியிலேயே விளக்கம் இருக்கவேண்டுமென்று எண்ணினர் போலும். மற்றைய உரை அடைய வளந்தான் ஜீயர் எழுதியது. இதுவும் ஈட்டைப்போன்றதேயாயினும் விரிவுடையது. தெலுங்கு வழக்குமுடையது. இனிமற்றைய உரைகள் வரும்.

=Pillais and jiyars unlike now were attri butes to Brahmins.

✳ Parimelalagar&Nachchinarkkiniyar have it.

§ Transliteration of original.

# எழுந்திரு! விழித்திரு!! பரத்தினைச்சாரப்பசித்திரு!

3ம் பக்கத் தொடர்ச்சி

ணீர் சொரிந்தது. இதைக் கண்ட துரியானந்தர் ஆஹா இவை புத்த பகவானின் வார்த்தையையும் உணர்ச்சியையுமல்லவா நினைவூட்டுகின்கின்றன என்று ஆச்சரியப்பட்டார்.

அமெரிக்க நாட்டில் நடந்த சம்பவம் உலகறிந்த விஷயமே. சர்வமத மகாசபையில் பழமையிலும் பழமையாகிய வேத உபநிடத உண்மைகளைப் புதுமையிலும் புதுமையாக எடுத்துக்காட்டி, இவர் இந்து தர்மத்துக்கும் பாரதநாட்டுக்கும் அரும்பணியாற்றியுள்ளார். இந்த மகாசபையில் பேசுவதற்கு அறிமுகப்பத்திரம் வேண்டுமென்று போதகாசிரியரை-(Prof. Wright) என்னும் அமெரிக்கப் பெரியாரைச் சுவாமிகள் கேட்டபோது அவர் "நீங்கள் சர்வமத மகாநாட்டில் பேசுவதற்கு உத்தரவு கேட்பது, சூரியன பிரகாசிக்க உத்தரவு கேட்பது போன்ற சிரிக்கததக்க காரியம், எனக் கூறினர். தமது அறிமுகப் பத்திரத்தில "நமது புலமை நிரம்பிய அறிஞரெல்லாருடைய அறிவைப் பார்க்கிலும் மேலான பாண்டித்தியம் பெற்றவர் இவர் என்று சிறப்பாக எழுதினர். சர்வமத மகாசபைக் கடைசிப் பிரசங்கத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சமரசதர்மம தொனிப்பதை ஈண்டு எடுத்துக்காட்டுவாம். 'கிறிஸ்தவன் இந்துவாக அல்லது பௌத்தனாக மாறவேண்டிய அவசியமில்லை; இந்து அல்லது பௌத்தன் கிறிஸ்தவனாகவும வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தததம நெறிநின்றொழுகி, பிறருடைய மதத்துக்கும் மதிப்பும மரியாதையுங் கொடுத்தல வேண்டும். பரிசுத்தம் தெய்வத்தன்மை தர்மம் என்பன ஒருசமயத்தவருக்கோ அல்லது சாதியாருக்கோ மட்டுஞ் சொந்தமானதல்ல. ஒவ் ஒவ்வொருமதமும் ஒழுக்கத்திற் சிறந்த பரம ஸ்திரி புருஷர்களை உண்டாக்கியிருக்கின்றது. எவனாவது பிறமதமழித்துத தனதே வாழக் கருதுவானாயின அவனைக் குறித்து மனதார் இரங்கி, எத்துணை எதிர்ப்பு வரினும் அதி சீக்கிரம் ஒவ்வொரு சமயக்கொடியிலும் 'போரலல உதவியே! அழிப்பலல, அணைப்பே! விரோதமல்ல சாந்தமும் சமரசமுமே!' என்று எழுதித் திகழ்வதைக் காண்பிப்பேன" என்று வீரகர்ச்சனை செய்தார்.

—வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளூர்" என்று பதில் சொன்னுள். இவை நிகழ்ந்து சிலதினஞ் செல்ல, சொக்கலிங்கமும் தங்கள் வீட்டிற்கு மீண்டு வந்து சேர்ந்தான்,

## "ஏதுங் குறைநேரத் தெய்வம் விடாது"

சொக்கலிங்கம் வந்தமையறிந்து குமாரசுவாமி கந்தசுவாமி யென்னுமிவர்கள் அவனைக் காணும்படி முருகேசபிள்ளை வீட்டிற்குச் சென்ருர்கள்; நகுலேசுவரியும் தனது கணவனிடம் அநுமதி பெற்றுக் கொண்டு தமையனுகிய குமாரசுவாமியுடன் கூடிக்கொண்டு முருகேசபிள்ளை வீட்டிற்குப் போய்க் கொண்டாடி வந்தாள். சண்பகத்தம்மாளும் காஞ்சனமாலையும் சொக்கலிங்கனும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். ஒருநாள் தன் மகன் ஓய்வாயிருக்கும் நேரத்தில் சண்பகத்தம்மாள் மகனுடைய விவாக விஷயமாக அவனுடன் கலந்து பேசினுள். புவனேசுவரியின் குணவிசேடத்தையும் அவளிடத்துள்ள தெய்வபக்தியையும், அந்தப் பெண்ணையே தன் மகன் விவாகஞ் செய்யவேண்டுமென்பதையும் தெளிவாக எடுத்துச் சொன்னுள், தாய் மகனுக்கு அவைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது காஞ்சனமும் அங்கேவந்து, அவைகளை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். "அண்ணு, புவன அக்கா உங்களிடத்தில் வைத்திருக்கும் அன்பும் விசுவாசமும் மிக அதிகம், உங்களுக்கு நீடித்த வாழ்வு வேண்டுமென்று புவன அக்கா விரதமிருப்பதையும் அல்லும் பகலும் தெய்வத்தை வழிபடுவதையும் நான் நேரிற் பார்த்திருக்கிறேன்; ஆனதால் நீங்கள் புவன அக்காவைக் கைவிட வொண்ணுது; அந்த அக்காவையன்றி வேறு எந்தக் கன்னிகையையும் மனதில் நினைக்கவுங் கூடாது" என்று தமயனுக்கு, தாயும் உடனிருக்க உள்ளமுருகச் சொன்னுள். "மகனே, உன் தங்கை வயசிற் குறைந்தவளாயிருந்தாலும் இவள் சொல்பவை முழுவதும் நிசம்" என்று சண்பகத்தம்மாள் சொன்னுள்; "அம்மா, நீங்கள் சொல்வதும் சரி, என அருமையான தங்கைச்சி சொல்வதும் நிசம், நீங்கள் இருவீரும் சொல்வனவற்றிற்கு, நானும் மாறலலேன்; ஆனல் என் ஆயுள் விஷயத்தில ஒரு இடையூறு இருக்கிறதென்பது நீங்கள அறிந்த காரியந்தானே, அந்த ஒன்றையிட்டுத்தான், அம்மா, நான் யோசிக்கிறேன்; பின்னிற்கிறேன; பூரண ஆயுள் இல்லாத நான ஒரு உத்தமமான கன்னிகையை மணந்து சில காலத்துள் அவளைக் கைமையாக்கிக் கலங்கவைப்பது பாவமல்லவா? அம்மா, அந்த ஒன்றையும் இட்டுத்தான நான பயப்படுகிறேன; அப்படியல்ல நான் அந்தப் பெண்ணை விவாகஞ்செய்ய வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்தினுல், இன்னும் ஐந்து வருடந்தானே, அந்தக் காலங் கழிந்தபின் நான் மணஞ் செய்து கொள்ளுகிறேன அம்மா, தங்கைச்சி, நீங்கள் ஒன்றுக்குங் கவலைபபடவேண்டாம்" என்று சொக்கலிங்கம் சமாதானஞ்சொன்னுன். "அண்ணு, உங்கள் ஆயுளுக்கு ஏதுங் குறை நேரத் தெய்வம விடமாட்டாது; நீங்கள் ஐந்துவருடம் போகட்டுமென்று தவணை போடுகிறீர்கள்; ஆனல் புவன அக்கா வெனிலோ உங்களைத்தான கணவனுக மனத்தில் நிச்சயித்துக்கொண்டதை நான் அறிவேன; புவன அக்கா செய்யும் பூசையும் விரதமும் வழிபாடும் எல்லாம் உங்கள் ஆயுளுக்கு இடையூறு வரவொண்ணுதென்பதை யிட்டேயாகும்; இவைகளை யெல்லாம் நல்லாய் யோசியுங்கள் அண்ணு" என்று ஆர்வம் பெருக உரைத்தாள் காஞ்சனம். சொக்கலிங்கன் யாதும் பதில் சொல்லுதலின்றிச் சிந்தித்தபடி சிறிது நேரம் இருந்தான். "மகனே, எங்களுக்கு ஏதுங் குறைநேரத் தெய்வம் விடமாட்டாது; எதற்கும் கவலைப்படவேண்டாம்; நீ நாளைக்கு உன் தங்கையையுங் கூட்டிக்கொண்டு சின்னம்மாள் வீட்டிற்குப் போய்வா" என்று தாய் சொல்ல, மகன் "அப்படியே செய்கிறேன், அம்மா" என்ருன். (முற்றும்)

# தமிழ் சிங்கள வினுப்பத்திரங்கள்

## அடுத்த வருடம் முதற் புதியமுறை

பாடசாலை பரீக்ஷைகளில் தமிழ் சிங்களம் ஆகிய பாஷைகள் சம்பந்தமாக அடுத்த வருடம் முதல் சில புதிய ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

இப்பொழுது பாடசாலைகளில் தமிழிலும் சிங்களத்திலும் கீழ்த்தரப் பரீக்ஷை ஒன்றும் சாதாரண பரீக்ஷை ஒன்றுமாக இரண்டு பரீட்சைகள் இருக்கின்றன. இவ்விரு பரீட்சைகளும் இவ்வருடத்துடன் எடுக்கப்பட்டு விடும். இவைகளுக்குப்பதிலாக ஆங்கிலப் பரீக்ஷைகளில் 1944 ம் வருடம் பண்டைய தமிழ்ப் பரீக்ஷையென்றும் நவீன தமிழ்ப் பரீக்ஷையென்றும் இரண்டு புதிய பரீக்ஷைகள் ஏற்படுத்தப்படும். சிங்களத்திலும் இம்மாதிரி இரு பரீக்ஷைகள் ஏற்படும்.

ஆங்கிலப் பாடசாலைகளிலுள்ள கிரந்தா உபாத்தியாயர்கள் இப்பரீக்ஷைக்குத்தோற்ற அனுமதியளிக்கப்படுவர். சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில் அவர்கள் சிங்களம் அல்லது தமிழை உப பாடமாக எடுத்துக்கொள்ளலாம்.

பாடப்புத்தகங்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதாற் பாடப்புத்தகங்களிலிருந்து கேள்விகள் வெளிவருவதுடன் அம்மாதிரியான வேறு புத்தகங்களிலிருந்தும் கேள்விகள் வெளியாகும். இம்முறை ஜே. எஸ். ஸி. பரீக்ஷையிலும் லத்தீன், கிரீக், தமிழ் ஆகிய பாஷைகளின் கேள்விப்பத்திரங்களிலும் நடைக்குக் கொண்டுவரப்படும். மீண்டும் பாடப் புத்தகங்கள் சாதாரணமாகக் கிடைக்கும்வரை இவ்வருடத்திலிருந்து நடைக்குக் கொண்டுவரப்படும். அடுத்த வருடம நடைபெறவிருக்கும் உபாத்தியாயர் தராதரப் பரீட்சையிலும இம்முறை அனுட்டிக்கப்படும்.

1944-ம் வருடத்தில் நடைபெறவிருக்கும் ஜே. எஸ். ஸி எஸ். எஸ். ஸி. ஆசிரிய தராதரப் பரீட்சை ஆகிய பரீக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடப்புத்தகங்களை 1945-ம வருடத்திய பரீட்சைகளுக்கும வைக்கப்படும்.

# அருணகிரி நாதர் விழா

திருவண்ணாமலையில் அவதரித்து அறுமுகப் பெருமானின் திருவருள் பெற்றுத் திருப்புகழ் என்னுந் தீந்தமிழ்ப் பிரபந்தம்பாடி முருகன் திருவடி சேர்ந்த அருணகிரிநாதசுவாமிகளின் தினம் நிகழும் சுபானு வருஷம் புரட்டாதிமீ 12ந் திகதி செவ்வாய்க்கிழமை (28-9-43) யன்று வண்கிழக்கு ஞான வைரவர் கோவிலிற் கொண்டாடப் படுமென அறிகின்ருேம்.

# சைவப்பிரகாச யந்திரசாலைச் சகாயநிதி

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் வெளியிடும் பத்திரிகைகளையும் பாலபாடங்களையும் ஏனைய புத்தகங்களையும், பலவகையான பஞ்சங்களோடு கூடிய இக்காலத்தில் முட்டின்றி வெளியிடும் வண்ணம் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி மேற்படி சபையார் பல அபிமானிகட்கு விண்ணப்பஞ் செய்தனர். அந்த விண்ணப்பத்திற்கு உடன்பட்டு அபிமானிகளுட் பலர் பொருளுதவி செய்து வருகின்றனர். இற்றைவரையில் பணத்தைத் தந்து உதவிய அபிமானிகளின் பெயர்களும் பணத்தின் தொகையும் கீழே காட்டப்பட்டுள்ளன:-

| | ரூபா சதம் |
|---|---|
| டக்டர். S. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம் | 200— |
| ,, C. சிவசிதம்பரம் ,, | 100— |
| ,, S துரையப்பா ,, | 100— |
| திரு. A. தில்லையம்பலம் ,, | 100— |
| ,, A. செல்லப்பா ,, | 100— |
| முதலியார் S. செல்லப்பா | 50— |
| திரு. சிக. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் | 50— |
| ,, S. பொன்னுச்சாமி | 50— |
| ,, மு. மயில்வாகனம் | 50— |
| ,, P. இராஜகோபால் (பகுதியாக உதவியது) | 50— |
| ,, K. சிவப்பிரகாசம் | 50— |
| மெஸர்ஸ் C. S. கந்தையாச் செட்டியார்கடை (பகுதியாக உதவியது) | 30— |
| திரு. S. அண்ணாமலை | 25— |
| ஸ்டேர்லிங், பெரியகடை | 25— |
| மெஸர்ஸ் N. வைத்திலிங்கம் கம்பெனி | 25— |
| திரு. S. S. பொன்னுத்துரை | 25— |
| ,, M. குமாரசுவாமி பெரியகடை (பகுதியாக உதவியது) | 10— |
| ,, A. S. இராமலிங்கம் | 10— |
| முதலியார் S கந்தையா நல்லூர், | 10— |
| மெஸர்ஸ் மலாயன் டிரேடிங்கம்பெனி | 10— |
| திரு. V. S. S. குமாரசுவாமி, கந்தர்மடம் (பகுதியாக உதவியது) | 10— |
| ,, SM. சரவணபவன், செய்திக் கந்தோர் கொழும்பு | 5— |
| | 1085. |

ஏனைய அபிமானிகளையும் தங்கள் தங்களாலியன்ற பணத்தை அனுப்பிவைத்து உற்ற விடத்து உதவிசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சி. பொன்னுசாமி,
கௌரவ மனேஜர்.

சைவப்பிரகாச யந்திரசாலை,
வண்ணார்பண்ணை.


## புதிதாக வந்துள்ள தினிசுகள்

அச்சிட்ட பருத்தி வொயில் சேலைகள்
சேலம், கோயம்புத்தூர்ச் சேலைகள்

சகலவிதமான சந்தர்ப்பங்களுக்கும் தகுதி வாய்ந்தது.

**கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில்**

பெனரிஸ்சேலைகள், பட்டுகள், ரிஸ்யூக்கள்,
பங்களூர், காஷ்மீரச் சுத்தமான பட்டுச்சேலைகள்.

ஓரளவு ஸ்டாக்குகளே இருக்கின்றன.
...விரைவில் வாங்கிக்கொள்ளுங்கள்...

**யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்கம்பனி.**

(Mis. 124. 23.9.43—27-9-43)


# 22-வது வருட நாய்க் காட்சி

## கொழும்பில் நடைபெற்றது

இலங்கை நாய் வளர்ப்புச் சங்கத்தின் ஆதரவில் 22-வது வருடாந்த நாய்க் காட்சி ஹோர்டன் பிளேஸில நடைபெற்றது. ஏறக்குறைய 165 நாய்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சனிக்கிழமை காலை மேன்மை தங்கிய தேசாதிபதி இக்காட்சியைத் திறந்து வைத்துப் பேசும்போது, யுத்த காலத்திலும் இவ்வைபவத்தை நடத்துவதைப் பாராட்டினுர். தாம்நாய்களைப் பார்ப்பதற்காகவே வந்திருப்பதாகத் தேசாதிபதி தெரிவித்தது தம்மை இவ்விழாவிற்கு அழைத்தமைக்காக நன்றி கூறினுர். பின்னர் அவர் நாய்களைச் சுற்றிப் பார்வையிட்டார்.

அன்று பிற்பகல் லேடி. கல்டிக் கோப் பரிசில்களை வழங்கினுர். சங்கத் தலைவர் தேசாதிபதி தம்பதிகளை உபசரித்துப் பேசினுர்.

# சுவிஸ்-இத்தாலிய எல்லைப்புறம் மூடப்பட்டது

லண்டன் செப் 20—

நேற்று மாலை சுவிஸ்-இத்தாலிய எல்லைப்புறத்திலுள்ள சியாஸோவைக் கைப்பற்றிய ஜெர்மன் துருப்புகள் இன்று காலை 10-30 மணிக்கு எல்லைப் புறத்தை மூடிவிட்டனவென்று சுவிஸ் ரேடியோ கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:

பிரயாண அனுமதிச் சீட்டுகள் யாவும் அனுமதிக்கப்பட்டு விட்டன. எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலுமுள்ள தொழிலாளிகள் எல்லைப்புறத்தைக் கடந்து கொண்டு மறுபக்கத்தில் தத்தம் வேலைக்குச் செல்ல அவாவுகின்றனர். ஆனல், அவர்கள் அவ்விதஞ் செய்ய முடியாமலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் இலவச சாப்பாடு

### அரசாங்கம் தனது பணஉதவியை அதிகரிக்கும்

கொழும்பு இலவச பாடசாலைகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக மத்தியானப் போசனம் அளிக்கும் பொருட்டுத் தான் அளித்துவரும் பண உதவியை அரசாங்கம் மேலும் அதிகரிக்கவிருக்கிறது.

கடைசி மாதம்வரை குழந்தைகளுக்கு அளிக்கும் சாப்பாட்டுச் செலவை அரசாங்கமும் கொழும்பு நகரசபையும் தங்களிடையே சமமாகப் பகிர்ந்து வந்தன. சென்ற மாதம்வரை குழந்தை ஒன்றுக்குச் சாப்பாட்டுச் செலவு சராசரி 5 சதம் ஆகிவந்தது. ஆனால், இம்மாதத்திலிருந்து அது 8 சதமாக உயர்ந்துவிட்டது.

இதனால், இச்செலவில் அரசாங்கம் $5\frac{1}{2}$ சதமும் நகரசபை $2\frac{1}{2}$ சதமும் கொடுக்கும். இம்முடிவு இது சம்பந்தமாக மத்திய அரசாங்க அதிகாரிகளுக்கும் நகரசபைக்குமிடையே இருந்துவந்த தகராற்றை ஒருவாறு தீர்த்து விடுகிறது. குழந்தைகளுக்குச் சாப்பாடு அளிக்கும் செ[illegible] அரசாங்கமே கொடுக்க வேண்டுமென்றும் அப்படியில்லாவிட்டால் அதிற் பெரும் பாகத்தையாவது அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்றும் நகரசபை நெடுநாட்களாக வற்புறுத்தி வந்திருக்கிறது.

உணவுப் பொருள்கள்கிடைப்பது கஷ்டமாயிருப்பதால் இலவசமாக மதியானச் சாப்பாடு சாப்பிடும் குழந்தைகளின் தொகை அதிகரித்துவிட்டது. உணவுப் பங்கீடு வருமுன் சாப்பிட்ட குழந்தைகளின் தொகையைப் போல்இரண்டு மடங்கு குழந்தைகள் இப்பொழுது இலவசமாகச் சாப்பிடுகின்றனர்.

## சங்கானையில் பாரதி நினைவு நிலயம்

சங்கானை தொட்டிலடி ஐக்கிய சங்க ஆதரவில் பாரதிவாரம் கொண்டாடப்பட்டது. பிரம்மஸ்ரீ. சு. வி. சாமா அவர்களால் உயிர்க்களை அமையத் தீட்டப் பெற்ற பாரதியின் உருவப்படம் நானாவித தீப அலங்காரங்களுடன் மண்டபத்தைச் சோபிக்கச் செய்தது. பாரதியின் ஞாபகார்த்தமாக அவரது பெயரால் அழைக்கப்படும் ஒரு வாசிகசாலை சைவத்திருவாளர். கா. தில்லையம்பலம் B. A. அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பொதுக்கூட்டம் கானரஞ்சிதசபாத் தலைவர் திரு. ப. முதலியார் செகராசசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஐக்கிய சங்கத் தலைவர் திரு. த. பொன்னம்பலம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர்ப் பிரம்மஸ்ரீ.சு. வி. சர்மா அவர்களால் பாரதியாரின் வாழ்க்கைத் தத்துவங்களையும் அன்னவரின் கவிநயத்தையும் பற்றி விரிவுரை நிகழ்த்தப்பட்டது. திருவாளர்கள் பிறகறர் சித. நடராசா, ஆசிரியர் செ. ஸ்ரீநிவாசன் ச. சேதுகாவலர், சி. சுப்பிரமணியம் ஆதியோரால் குறிப்புரை கூறப்பட்டது. திரு. சு. ஆறுமுகம் அவர்களால் பாரதி விழாச் சபையின் சார்பாகவும் ஐக்கிய சங்கத்தின் சார்பாகவும் உரிய வகையில் நன்றி செலுத்தப்பட்டது. கொண்டாட்டம் அவ்வாரம் முழுவதும் பாரதி பஜனை சகிதமாக நடைபெற்றது.

—கடிதம்

## வண்ணை-விவேகானந்த வித்யாலயப் பெற்றோர் ஆசிரிய சங்கம்

மேற்படிசங்கம் நிகழும் 23-9-43 வியாழக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அவ்வமயம் வண்ணை C. S. S. மணிஐயர் 'திருநீலகண்ட நாயனர்' சரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதம் சங்கீதகதாப் பிரசங்கம் செய்வார்.

இவ்வித்தியாலயத்தைப் புதிதாகக் கட்டட நிதி சேர்த்தற்காக 1941, 1943-ம் ஆண்டுகளில் நடத்திய சங்கீத விழாக்களின் பேரால் 400 ரூபா 25 சதமும், பெற்றோரும் பிற பிரபுக்களுமாக வாக்களித்த நிதியின் பேரால் 117 ரூபாவும், ஆசிரியர் மேற்படி நிதிக்காக கழித்துவந்த தொகையின் பேரால் ரூபா 300 ம் ஆக மொத்தம் 817 ரூபா 25 சதம் கையிருப்பாக விருக்கிறது. பாடசாலைக் கட்டடவேலை ஆரம்பிக்கப்பட்டுளது. கட்டடத்தை நிறைவாக்கத் தரும சீலர்களது உதவியை வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
வே. சுப்பிரமணியம்,
ஷ சங்கக் காரியதரிசி.

## வட்டுக்கோட்டைச் சங்கீத கழகம்

### ஸ்ரீமகா நவமி சங்கீத உற்சவம்

உயர்திரு. K. நாகலிங்கம் அவர்கள் தலைமையின்கீழ் இவ்வாண்டு அக்டோபர் மாசம் 5, 6, 7 ம் தேதிகளில் நவராத்திரிவாணி தினங்களை முன்னிட்டு மேற்படி மகோற்சவம் வட்டுக்கோட்டைச் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் அதிவிமரிசையாகக் கொண்டாடப்படும் சிறந்த இசைவாணர்களும், இசைவாணிகளும் இவ்வுற்சவத்தில் பங்குபற்றிச் சிறப்பிப்பர் என மேற்படி கழகக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## நல்லூர்ச் சிவன்கோவிலில் நவராத்திரிபூஜை

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சுபானுவருடம் புரட்டாதிமாதம் 14ந் திகதி (30-9-43) வியாழக்கிழமை முதல் 21ந் திகதி (7-10-43) வியாழக்கிழமை வரை எட்டுத் தினங்களிலும் நல்லூர்ச் சிவன்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கமலாம்பிகா தேவிக்கு பகலில் விசேஷ அபிஷேகமும் நவோத்தர சத சங்காபிஷேகமும், இரவில் ஸ்ரீ சக்ரபூஜை முதலிய விசேஷ பூஜைகளும் 22ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் அபிஷேகமும் விஜயதசமியுற்சவமும் நடைபெறும்.

கடிதம்.


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திரூ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்து[illegible]

(Mis. 98. 5.8[illegible])


## பகிரங்க கூட்டம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (19-9-43) பிற்பகல் $7\frac{1}{2}$ மணியளவில் கொல்லங்கலட்டிச் சைவவித்தியாசாலை மண்டபத்தில் தெல்லிப்பழை வெற்றிலைக் கிருஷிகர்கள் கூட்டமொன்று அரசாங்கசபை அங்கத்தவர் ஸ்ரீமாந். சு நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அத்தருணம் நியாயதுரந்தரர் ஸ்ரீமாந். கு. வன்னியசிங்கம் B. A. அவர்களும், இந்துக்கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீமாந். ந. சங்கரப்பிள்ளை B. A. அவர்களும், Sir. கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீமாந். வே. சங்கரப்பிள்ளை அவர்களும் தற்போது அமுலில் இருக்கும் வெற்றிலை விலைக் கட்டுப்பாடு, யாழ்ப்பாண வெற்றிலைக் கிருஷிகர்களுக்கு அதிக நஷ்டத்தை விளைவிக்கின்றதென்றும், யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழைக் கிராமத்திலே வெற்றிலைச் செய்கை அமோகமாய் நடைபெறுகின்றதென்றும், பிரதானமாகத் தெல்லிப்பழைக் கிராமத் தரைகள் வெற்றிலைப் பயிருக்கே உகந்ததென்றும் தென்னிலங்கையிலும் பார்க்கப் பன்மடங்கு கூடிய கஷ்டம் யாழ்ப்பாணம் வெற்றிலைக் கிருஷிகர்களுக்கு உண்டென்றும் விரிவாக எடுத்துப் பேசினார்கள். பின்னர், பின்வரும் பிரேரணைகளை ஆக்கி அவற்றை விவசாய மந்திரி அவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அவையாவன:- (1) தற்போது இருக்கும் வெற்றிலை விலைக் கட்டுப்பாடு, யாழ்ப்பாண வெற்றிலைச் செய்கையாளர்களுக்கு அதிக கஷ்டத்தை விளைவிப்பதால் அக்கட்டுப்பாட்டை முற்றாக நீக்க வேண்டுமெனத் திரு. ஆ. காசிநாதன், பிரேரிக்க திரு. க. சின்னத்தம்பி அநுவதித்தார்.

(2) விலைக் கட்டுப்பாட்டை நீக்காதவிடத்துப் பின்வரும் விலைக் கட்டுப்பாடுகள் யாழ்ப்பாணத்தாருக்கு ஏற்றதென்று திரு. ந. கந்தையா பிரேரிக்க திரு. ஞா. வைத்திலிங்கம் அநுவதித்தார்.

1 மாற்று வெற்றிலை 100க்கு 70 சதம்
2 கொடிமாற்று வெற்றிலை 100க்கு 70 சதம்
3 அடுவல் வெற்றிலை 100க்கு 65 சதம்
4 சாய்ப்பு வெற்றிலை 100க்கு 60 சதம்
5 கழிப்பு வெற்றிலை 100 க்கு 50 சதம்

இரு பிரேரணைகளையும் சபையினர் முழுமனத்துடன் அங்கீகரித்தனர்.

பின்னர்த் 'தெல்லிப்பழைவெற்றிலைக் கிருஷிகர் சங்கம்' ஒன்று நிறுவப் பட்டது. அதற்கு நியாயதுரந்தரர் திரு. கு. வன்னியசிங்கம் தலைவராகவும், திரு. ந. சங்கரப்பிள்ளை B. A. அவர்களும், திரு. ந. கந்தையா அவர்களும் உபதலைவர்களாகவும், திரு. க. சிவராசா காரியதரிசியாகவும், திரு. ஆ. காசிநாதன் உபகாரியதரிசியாகவும், திரு. ஞா. வைத்திலிங்கம் தனாதிகாரியாகவும், திருவாளர்கள்: ச. சின்னத்தம்பி, சி. இராசையா, த. கனகநாயகம், கா. கந்தையா, க. வீரசிங்கம், வ. மாப்பாணர், சி. கந்தையா, ச. இராசசிங்கர், த. சிவஞானம், வே. கந்தையா, சி. ஏகாம்பரம்பிள்ளை, ச. இளையகுட்டி, வ. சிதம்பரப்பிள்ளை, க. வயிரவப்பிள்ளை ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர், பிற்பகல் 9-30 மணியளவில் கூட்டம் நிறை வெய்தியது.

—கடிதம்


## அறிவித்தல்

1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதிக்குப் பின்னர் சகல 5 சத நோட்டுகளும் சட்டப்படி செல்லமாட்டா.

இத்திகதிக்குப்பின்னர் இந்தநோட்டுகளையும் (2சதம் 3சதம் பெறுமதியான பாகங்களாகப் பிரிக்கப்பட்ட இந்த நோட்டுகளின் பாகங்களையும்) வைத்திருப்போர் கொழும்பு பொதுத் திறைசேரியில்தான் மாற்ற முடியும்.

இந்த நோட்டுகளை வைத்திருப்போர் இவைகளை 1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மீ 30-ந் தேதிக்கு முன்னர் வங்கிகளில் போடவேண்டும், அல்லது கச்சேரிகளில் மாற்றிக்கொள்ளவேண்டும்.

மாற்றிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் நோட்டுகள் அதிகமாக வில்லாவிட்டால் 1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதி வரைக்கும் தபாற்கந்தோர்களிலும் புகையிரத ஸ்தானங்களிலும் இந்த நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

எச். ஜே. ஹக்சாம்,
தலைவர், நாணயக்கொமிஷனர் சபை,
செக்கிறற்றேறியற்,
கொழும்பு.

(G. 22, 16-8 & 20-9 & 23-9-43)

## அ றி வி த் த ல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30, 11-5.43—10-11.43)

குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 23 September, 1943

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org